உ
ஓம்!
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

---

# சங்கர பங்கஜ ஹாரம்,

இஃது

சென்னை, சேத்துப்பேடு

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்பிரகாஸ மடம்

ஸ்ரீ சிவப்பிரகாஸ தேசிக சுவாமிகளின்

பூஜிதனும்.

நீலகிரி உதகமண்டலம், திருக்காந்தல்

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மடாலயம்

ஓம் அசல பீடம் ஸ்ரீசாது ஓம் பிரகாஷ் சுவாமிகள்

அருளபிமானியனுமாகிய

சென்னை ஆல்தோட்டம்

கூடலூர் இரா. பொன்னுஸ்வாமி பிள்ளையவர்களால்,

நீலகிரி உதகமண்டலம் வண்டிசோலை

கனம் S, P. கிருஷ்ணசாமி பிள்ளையவர்கள்

அபீஷ்டத்தின்படியியற்றி

ஷையூர் உட்சைட் உத்தியோகஸ்தர்களினுதவியால்,

அச்சிடப்பட்டு

ஷையூர் வண்டிசோலை

ஸ்ரீ ஏகாந்த சமய சங்க பஜனை மடாலயத்தில்,

1923-ஞு ஜூன்-மீ 24-உ ஆதிவாரம்

அரங்கேற்றஞ் செய்யப்பட்டது,

1923.

21 JUL 1923

02:417
N23.
177320.

894.81108
3022

21 JUL 1923

உ

ஓம்!

ஸ்ரீ கணேசாய நம:

நீலகிரி உதகமண்டலம், திருக்காந்தல்

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மடாலயம்,

ஓம் அசலபீடம் உலோகோபகார வித்தியாநந்த சபை

ஸ்ரீ சாது ஓம் பிரகாஷ் சுவாமிகளின் அபிப்பிராயம்.

## மங்கல விருத்தம்.

1 2

பார்பூத்த வயனரனு மறுமுகனு மற்றுளவு பாரும் விண்ணும்
சீர்பூத்த தனிமுதலே ததிகிருஷ்ண னெனமலருஞ் செய்கை வாய்ந்த
வார்பூத்த சங்கரபங் கஜஹார பக்திரச மாக்ஷி பண்ணை
பேர்பூத்த கவிபொன்னு சாமியவ ரழகாக பேசி னரே.

அன்பர்காள்! பக்தி நவவிதம், இவற்றை ஆசிரியர்பால் அல்லது சாஸ்திர வாயிலாய் அறியற் பாலதே. அவற்றுள் ஹரி வேறு ஹரன் வேறு எனும் பேதம் பாராட்டுதலின்றி இருமூர்த்தங்களும் பகிர் முகத்தில் வேற்றுமையுடையதாய் தோற்றினும் தத்துவ ஆராய்ச்சியினும் அந்தர்முக திருஷ்டியினும் இருமூர்த்தங்களுக்கும் அதிஷ்டானம் அல்லது வஸ்து ஒன்றேயென்று உணர்வது உயர்ந்த பக்திக்கு உரித்தான சத்துவ குணமாயினரென ஆன்றோர்கள் திருவாக்காம் சுருதிகள் நிலவுகின்றன. இஃதேற்க, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவானவர் அருஜுனருக்கு குருக்ஷேத்திர பூமியில் பகவத் கீதாவெனும் திரு பிரஸன்னோத்தர சம்வாதத்தில் பத்தாவது அத்தியாய ஸ்லோகமாவது:

சந்திர னானன் மீனிற் சாம நான்மறையி
னிந்திர னன்தே வர்களிந் திரியங் களின் மனநா
னெந்திய மாமுரு வுகளிற் சேதன நானுருத் திரரின்
மந்திர மாஞ்சங் கரனனி யக்கரில் வைச்சிர வணன்.

(இ-ள்) நக்ஷத்திரங்களிற் சந்திரனன், நாலுவேதங்களிற் சாமவேதம் நான், தேவர்களி லிந்திரனன், இந்திரியங்களில் மனது நான், பிறந்திருந்து சுழலப்பட்ட ரூபங்களில் அறிவுநான், ருத்திரரில் மந்திரமான சங்கரனன், இயக்கரிற் குபேரனன்—(எ-று)

மலைகளின்மா மேருநான் வசுக்களிற் பாவகனன்போர்த்
தலைவர்களிலறு முகனன் சலநிலையிற் சாகரனு
னிலைய மிலாயா கத்திற் செய்யாகமா வேனு
னிலையு டையமலைனு மலற்றி லிமவா னயிற்பேனன்.

320

(இ-ள்) மலைகளில் மஹா மேருவானவன், வசுக்களிலே பாவக வசுவானவன், சேனாதிபதிகளிற் சுப்பிரமணியனானவன், தண்ணீர் நிற்கிற இடங்களில் சமுத்திரம் நான் அழிவில்லாத யாகத்தில் செய்யாகமாகின்றவனான் நிலையாய் நிற்கின்றதாபரங்களிலும் பந்தமாக நிற்கின்றவனானவன்—(எ-று)

என் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே சங்கரனென்றும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே சுப்பிரமணியனென்றும் திருவாய் மலர்ந்திருப்பதால், இந்நூலை ஸ்தௌத்தியஞ் செய்பவரும் ஹரி ஹர பேதமின்றி திரிகரண சுத்தியுடன் நோக்கில் சித்த சுத்தியும் மல விக்ஷேப நாசமும் உண்டாகி அதிகாரத்துவராகி சற்குரு தரிசன கடாக்ஷம் பெற்று ஆவரண தோஷமும் நாசமாகி மஹா வாக்கிய லக்ஷியார்த்தமாம் ஆத்யந்த ரஹித சச்சிதானந்த சொரூபராக விளங்கி ஆனந்த ஷாந்தி யுறுவர் என்பது திருவருள் சம்மதம்.

GR-47
N23

ஓம்! சுபம் தத்ஸத்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

177320

## கடவுள் வணக்கம்,

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகிற் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

### "தாயுமானர்"

சைவ சமயமே சமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளிக் காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய் வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வச் சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் ஜெகத்தீரே.

காகமுறவுக் கலந்துண்ணக் கண்டீ ரகண்டா காரசிவ
போகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடைக்குதையோ வின்புற்றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் ஜெகத்தீரே.

அன்பெனு மலர்சாத்தி, ஆவியெனுங் கற்பூரமேந்தி, போற்றிசெய் தானந்த பரவசமடையு மெய்யடியார்களினிருதய கமலவாசகனுமும் மனம், வாக்கு, காயம், மூன்றினுக்கு மெட்டாத பரம்பொருளாய மாண்மாக்கள் எந்த வகைக் கோலத்தி லென்னென்ன விதமாயவர்களுள்ளஞ் சிந்திக் கின்றனவோ அவ்வண்ணமெலா மியைந் தளவிறந்த சொற்சொரூபாகார குருமூர்த்தங்கொண் டெழுந்தருளி வனுக்கிரகம் புரியுந்தயாளுவாகியுஞ் சகலாத்மகோடிகளுக்கு மருணும்பர வாழ்வினை யருட் சுரந்து காக்குஞ் சருவஜீவதயாபர மூர்த்தியாகியுஞ் சகல காருண்ய கர்த்தவ்யனுகிய ஸ்ரீ சிவ பெருமானருணிறைந்த பூவுலகின்கண்ணே காணப்படு மெழுபிறவித் தோற்றத்தில்,

### "ஔவையார்"

அரியது சேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிட ராதலரிது
மானிட ராயினுங் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பெடு நீங்கிப் பிறந்த சாலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது

ஞானமுங் கல்வியு நயந்த காலையும்
தானமுந் தவமுந் தாஞ்செயலரிது
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே. (எனவும்)

"சிவப்ரகாசர்"

உலகதி லுறுமெழு பிறப்பினுண் மனுக்களே யுசிதமரங்
கலையுண ரறிவுட னுனைக்கலந் தருள்வழி காண்பதும்
அலைந்திடு மனக்குரங் கொருவழி நிலைப்பது மருமையாற்
றலம்புகழ் மயிலைவாழ் சிவமேநின் றருளல்லாற் கூடேனே. (எ-ம்)

எண்ணிலா கோடிபுண்யத் திசைந்துமா னிடனுமாக
கண்ணகல் பூவிமேல் தந்த கருணையங் கடலே (எ-ம்)

அரிதரிதிச் சனனமெடுப் பதினு மங்கங் குறையா
தரிததுபோ னினதடிக்கா ளாதலுடன் குருதா
ளருகிருந்தன் பதுசெறியும் படியுலைழத் தாசீர்பெற்
றந்தரங்க பக்திநெறிக் கருகாத வரிதாய்ப்
பெரியவர்க ளெனும்மகனி யர்களுரை பொய்த்திடுமோ. (எ-ம்)

ஆப்தர்களா லளப்பரிய சுருதிகளால் திருவாய் மலர்ந்தருளியுள்ளா ரென்பதி யாவருக்குஞ் சொல்லாமலே விளங்குமென்பதற் கையமில்லை யாயினு முலகின் கண்ணுள்ள ஜீவகோடிகளில்

"பவணந்தி முனிவர்"

புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிற்
முரணந் தாதிகா வறிவோடி ரறிவுயிர்
சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்
தும்பிவண் டாதிகண் ணறிவினு லறிவுயிர்
வானவர்மக்க ணரகர் விலங்கு புள்
ளாதி செவி யறிவோ டையறி வுயிரே.

புல், பூடு, மரம், கொடி முதலியவைகளுக்கு ஓரறிவும், சிப்பி, சங்கு, கிளிஞ்சல் முதலியவைகளுக்கு ஈரறிவும், செல்லு, எறும்பு, தம்பலப்பூச்சி, அட்டை முதலியவைகளுக்கு மூவறிவும், தும்பி, வண்டு, தேனீ முதலியவைகளுக்கு நான்கறிவும் தேவர், மனிதர், நரகர், மிருகம், பறவை, பாம்பு முதலியவைகளுக்கு ஐயறிவு மமைத்து, அவைகளுள் தேவர், மக்கள், நரகர் ஆகிய மூவருக்கு உயர்வு கொடுத்து, பஞ்சவறிவோடு பகுத்தறிவெனும் ஞானம் மக்களாகிய நமக்கருளிய வண்ணம் மற்றெந்த பிராணிகட்குங் க்ருபை பாலித்தாரில்லை. நாம் மேலான யறிவை வாய்ந்திருச்

இன்றேயென்பது அவரவர்க ளனுபவமே போதியா நிற்கும். அத்தகைய மேலான யறிவை வாய்ந்திருக்கும் நாம் நித்தியமா? அநித்தியமா? வென விசாரிக்கின்

"பட்டினத்தார்"

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுட னேயுடலைச்
சுட்டுவிடப் போகிறார் சுற்றத்தார்—பட்டதுபட்
டெங்கோ முஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம்.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே யினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண் கயிலா புரிக்காளத் தியே.

---

"பாம்பாட்டி சித்தர்"

நீரிலெழு நீர்க்குமிழி நிலைகெடல் போல்
நில்லாதுட னீங்கிவிடு நிச்சய மென்றே
பாரிற்பல வுயிர்களைப் படைத்தவன் றனைப்
பற்றறவே பற்றித் தொடர்ந் தாடாய் பாம்பே.

---

"கபிலர்"

எப்போ தாயினுங் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் றன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் றமரொடும் போகான்
நல்லா ரொன்று னல்குர வறியான்
தீயரொன் றுஞ் செல்வரொன் றுன்னான்
தரியான் ஒருகணந் தருக வென்னான்
உயிர்க் கொடு போவான் உடல் கொடு போகான்
உயிரினை யிழந்த வுடலது தன்னைக்
களவு கொண்ட கள்வனைப் போலக்
காலு மார்த்துக் கையு மார்த்துக்
கூறை களைந்து கோமணங் கொளுவி
ஈமத் தீயை யெரியெழ மூட்டிப்
பொடி படச் சுட்டுப் புனலிடை மூழ்கி.

---

"நாலடியார்"

கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலற
பிணங்கொண்டு காட்டுய்ப்பார் கண்டும் — மணங்கொண்டீண்
டுண்டுண்டுண் டென்னு முணர்வினாற் சாற்றுமே
டொண் டொண் டொண்ணென்னும் பறை.

எனு மூதோர்கள் திருவாக்கினாலு மனுபவத்தினாலு மித்தேக மநித்திய மென நன்கு புலப்படுகின்றதாகையால்,

"காளமேகர்"

மூக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அங்காலுரைக் காலகண் டஞ்சாமுன் — விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது.

"கபிலர்"

நாளை நாளை என்பீ ராகில்
நமனுடை முறைநா ளாவது மறியீர்
நம்முடை முறைநா ளாவது மறியீர்.

எத்தன்மைத்தாங் கடமாகிய இத்தேகத்தை விட்டு ஜீவேஸ்வரனாகிய சிவம் நீங்கி சவம் என்னும் பெயரையடைந்து மண்ணுக் கிரையாகாமுன்

"சிவப்ரகாசர்"

சூத்திரந் தன்னை யறிந்து மெய்ஞ்ஞானச் சுகநிலையை
நேத்திரந் தன்னுள் காட்டியாட் கொளுங்குரு நிமலனையோர்
மாத்திரைப் பொழுது நீங்காது சார்ந்திட மன்னுமருள்
மேத்தகை யாளரன்றோ வண்மைக் காண்பர் விநாயகனே.

யூக மனுபவஞ் சுருதியென் பதவெலா மூயர்தேசிக
ராகமம் போன்ற வார்த்தை யினாலவை யசப்படுங்காண்
போகமும் யோகமும் மோகமும் மிவைகட் கெட்டிபமே
மேகத்தைப் பார்க்கினும் மியன்ருட் பெரிதே விநாயகனே.

குருவரு ளொன்றே யெல்லா நன்மை யீந்து குணந்தரலா
மருளென்ப தவ்வழித் தானேவந் தணுகு மாணையதே
இருவினை யற்று சாந்தங்கொண் டன்பி லிணைந்தவர்கண்
மிருத்துவ நீங்கிச் சுகமுத்திச் சேர்வர் விநாயகனே.

வானமின்றேல் வருணனில்லை மதியில்லையே வொளியில்லைபோல் மாணவர்க்கு
கோனவனுங் குருவில்லையே லென்னபுத்தி வருதலைமந்தா குணித்தப்பாரு

ஞானமணங் கமழரளின் பதமுடிமேற் படியவுள்ள மலர்ந்த தாளு
லீனவினைப் பொடியாகுங் கடைத்தேறி வாழ்குவமென் றெண்ணாலாயே.

ஞானவாழ்வினை யடைவது மக்களாகிய நம்முடைய கடமையாதலால் ஞான மூர்த்தி சாதனையைப் பெற ஆசாரியரின் அனுக்கிரகமே முக்கிய மென்றும், ஞான சாஸ்திரமானது எளிதிலுணர்ந்துக்கொள்ளக் கூடாமை யாலுஞ் சற்குருவை யடைந்து

## சற்குரு வியல்பு

(அரப்பளீசுர சதகம்)

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
　　விசாரவிஞ் ஞான பூர்ண
வித்யாவி சேஷசற் குணசத்ய சம்பன்ன
　　வீரவை ராக்ய முக்ய
சாதார ணப்பிரிய யோகமாக் காதிக்ய
　　சமாதிநிஷ் டானு பவராய்ச்
சட்சமய நிலைமையும் பரயந்த்ர பரதந்த்ர
　　தருமமும் பர சமயமும்
நீதியி லுணர்ந்துதத் துவமார்க்க ராய்ப்பிரம
　　நிலைகண்டு பாச மிலராய்
நித்யா நந்தசை தன்யரா யாசையறு
　　நெறியுளோர் சற் குரவராம்
ஆதார மாயுயிர்க் குயிராகி யெவையுமா
　　மமலவெம தருமை மதலே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
　　ரப்பளீ சுர தேவனே.

---

## "சிவஞான போதம்"

தேக மெனத்தகவுஞ் சிந்தை யுடைத்ததுவும்
போக சமுசாரத்திற் புக்கதுவும்—தாகமது
கொண்டு தவிர்த்ததுவுங் கூறுங் கனவெனவே
கண்டு சொல்லும் நூலதனைக் காண்.

ஞான கல்வியினைக் கற்று கேட்டல், சிந்தித்தல், நடத்தல் இம்மூன்றினை யுங் கலங்கா மனத்தராய் சகல காருண்ய மூர்த்தியாகிய பரமசிவனென் னுங் கர்த்தாவின் திருவருளை யடையுமாறு சற்குருவினிடமாய் உடல், பொருள், ஆவி மூன்றையுந் தத்தஞ்செய்து விபூதி, அக்கம் எனுஞ் சிவ சின்னங்களை தரித்தவராய் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனுஞ்

சதுர்வித விலக்கணங்களைக் கடைபிடித்தொழுகி

"சங்கராசாரியர்"

தலங்கள் சுத்தித் திரிதல்நதி மூழ்கல், புட்பந்
தனையெடுத்து சாத்தல்தொடுத் திடுதல் கோயில்
துலங்கமுடித் திடுதல்விளக் கிடுதல் கூட்டல்
சுத்திமெழு கிடுதல்பெரி யோரைக் காணில்
வலமொடுவீழ்ந் தெழுந்துகரங் குவித்தல் நோன்பு
வருந்தியிடு தல்குளங் கழிவு செய்தல்
நலங்கள் பெறுஞ் சரிதைவழி நடத்தினோர்கள்
நல்லறிவு வாழ்வுமிகப் பெறுவர் தாமே. (சரியை)

நறுமல ரிளநீர்பழந் தேன்பாலோடு
நல்லகந்த வர்க்கமுடன் றூபதீபம்
பெறுஞ்சிவனைக் கணபதியைப் பூசைசெய்தல்
புண்ணியபா பங்கள்தெரிந் தோதல்நூல்கள்
சிறிதுபடித் துயிர்கள் வதை யாமல் நித்தம்
செய்தொழிலுங் கிரியைவழு வாமல் நின்றோர்
உறுதிபெறும் பலன்றிவு மீதலோடு
முயர்ந்தகுடி யாகிமிக வாழ்வார் தாமே. (கிரியை)

உள்ளகரு விக்குலங்கள் தொண்ணூற் றாறு
முற்றவத்தை யைந்துமா தாரமாறு
மெள்ளவறிந் தன்பத்தோ ரக்ஷ ரமும்
விளங்கு சதா சிவனையறிந் துட்புகுந்து
கள்ளமனக் கவலை யொழித் திருகலையே
கருதிவா வழைத்து மொரு வழியிலேற்றி
கொள்ளவல்ல பேருமெழு வாசற் பூட்டி
கொண்டுமசை வற்றசிவ யோகஞ் செய்வார். (யோகம்)

எறும்புகடை யானைமுதற் பேதாபேத
மெண்பத்து நான்குநூ றாயிரத்துள்
உறும்பொருளாய் நின்றசிவ னொருவன்றன்னை
யுள்ளுணர்ந்து காண்பதுவே காக்ஷி நன்றும்
பெறும்மவனைப் புறம்பென்று பேசு மாந்தர்
புறம் புணர்ந்து காண்பதரி தாகுமென்றே
விறுமன்மறை நாலுமுரைத் திடுமேலர்க்குள்
மிகுத்த மணம் போற்பரத்தை மெய்யிற்காணே (ஞானம்)

## ஞான விளக்கம்.

சரிதையிலே யீசன் சடவடிவாய் நின்றான்
கிரியையிலே மந்திரத்திற் கிட்டி—யருகிருந்தா
னூனமிலா யோகத்தி லுள்ளொளியா யே நின்றான்
ஞானமதி லானாயி னான்.

சதா சிந்தித்து பனுவலால் வந்தித்து ஆனந்தித்து பரவசமடைதலே, திருப்பணியாகக் கொண்டு ஆண்டானாகிய பரமசிவத்தின் திருவருட் கிலக்கராகவேண்டி, அப்பெருமானின் திருவடிக்குத் தொண்டராகி

"ஔவையார்"

பெரியது கேட்கின் வரிவடி வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன்
கரியமா லலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி கையிலடக்கம்
குறுமுனி கலசத்தில் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலை பாரம்
அரவமோ யுமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ யிறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

வேறு

கண்ணுதலா லபநோக்குங் கண்களே கண்கள்
கறைகண்டன் கோயிற்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபாகனைப் பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞானைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடும் நன்னாவே, நன்னா
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல் பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை

"சிவப்பிரகாசர்"

(உந்தியார்)

நலமுற்றும் வாழ்வருள் நம்பனடி பணியாத்
தலையதுந் தலைபோவென் றுந்திபற
தகைவிலாச் சிலையாமென் றுந்திபற

177320

அகமுறும் பவநோயை யகற்றும் பரனைக்காணார்
முகத்தினிற் கண்ணவை தந்தீபற
முனிவுளப் புண்ணேயென் றுந்தீபற

பரமசிவன் சரிதை பண்புடன் கேளாதார்
ஸ்திரமிகு காதென்னென் றுந்தீபற
தீங்குள வெறுந்துளை யுந்தீபற

வாகுயர் நாதனை வந்தன மதுசெய்து
வாழ்த்தவா யானது வுந்தீபற
வழுத்திடா மூகையென் றுந்தீபற

ஈசுரன் பூசனை செய்திரு கரமதை
நேசமாக் கூப்பாதை யுந்தீபற
நிகழ்மரப் பலகையென் றுந்தீபற

ஆலயந் தொழுவது சாலநன் முறைப்படி
சீலமாய்ப் போகாக்கா லுந்தீபற
சிறப்பிலா ஒற்றக்கோ லுந்தீபற

பிரபஞ்ச மயல்நீத்துப் பெருமா னருளைத்தினம்
பிறங்கிடா மனமோவென் றுந்தீபற
பேய்வாழ் வனமெனவே யுந்தீபற

எத்தகைத் தாயினு மெல்லாமொன் றெனவெண்ணி
பத்தியைக் கைக்கொண்டோ ருந்தீபற
பரனடிக் காண்பாரென் றுந்தீபற

முக்காலத்து முண்மையாய்விளங்கு பரமானந்த தெய்வமாகிய ஞான சாரப் பொருளென்னும் பரமசிவத்தை

"சிவப்பிரகாசர்"

காண்பதற்கு வேதாந்த கல்வியெனுங் கண்ணிரண்டு
பூண்பதற்கு நல்லருளே பொக்கிஷமாம் — அண்மை
மனமே யிதுசமையம் வள்ளல் சிவனருள்
தினமுமற வாதுசிந்தைச் செய்

யர்ச்சித்து நித்யானந்த போகத்திற் காட்படுவான்வேண்டி ஆன்றோர் திருவாய் மலர்ந்திருக்கின்ற அருந்திரு வாக்கினையே முதற்றுணையாகக் கொண்டு அன்பின் பற்றுதலினு லெழுதப்பட்டது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சங்கர பங்கஜ ஹாரம்.

## விநாயகர் துதி.

### கலிவிருத்தம்.

அத்தி மாமுக வைங்கரா முன்னவா
சத்தி யாமுமை சாற்றிடும் வானவர்
நித்தம் போற்றிடும் நின்மலன் ருளினை
யத்தி யாய்துதி பாமாலை பாடவே.

பாட வாவருள் பக்தருள் லாசனே
நாடு வார்மதி நல்குந்தி யாகனே
கூடு மன்பர் குணாலய போதனே
நீடெங் தேசிகா நின்னடி போற்றியே.

---

## சுப்ரமண்யர் துதி.

கணபதிக் கிளையா ஹரிதிரு மருகா கந்தனே வோம்சர ஹணனே
மணட்டி யேயுயர் தேவர்க டுதிக்கும் வள்ளிதெய் வானைநெங் சாரா
குணநிதி யேவசு ரன்றனைக் காய்ந்த குழகனே சம்புவின் கழன்மேற்
வணங்கி பாமாலை வழுத்திடக் கணித்தாள் வல்லவா நின்பதம் நமஸ்தே

---

சென்னை, சேத்துப்பேடு ஸ்ரீ ஜெயவிநாயக சிவப்பிரகாச மடம்
ஸ்ரீ சிவப்ரகாச தேசிக சுவாமிகள் மீதியற்றிய

## குரு ஸ்துதி.

பவக்கடற் றன்னி லாழ்ந்து பாதபித் திடுமெவ் வேளை
நவம தாய் தோன்றி சைவ நன்னெறி தன்னை யூட்டி
தவம்பெறும் வாய்மை பக்தி தழைத்திட வருள்சு ரந்த
சிவப்பிர காசதேவே திருவடி போற்றினேனே.

---

நீலகிரி உதகமண்டலம், திருக்காந்தல்
ஸ்ரீ திரிமூர்த்தி மடாலயம், ஓம் அசலபீடம்,
உலோகோபகார வித்தியாதார சபை,
ஸ்ரீ சாது ஓம்பிரகாஷ் சுவாமிகள் மீதியற்றிய

## குரு ஸ்துதி.

கங்கைசூழ் புடவிமிசை கழறிடுமா மூப்பொருளுந்
துங்கவனே யேகமென சுடரொளிபோற் காட்டிமிக்க
சங்கை கொண்ட வென்மனதை சமரசநன் னிலைநாட்டி
உங்கழலி லாட்கொண்ட ஓம்பிரகாஷ் குருசரணே.

இராகம்-கல்யாணி. ரூபகதாளம்.

### பல்லவி.

ஓம் கஜமுக ப்ரணவ மூலா ஹர ஹர
ஓம் கஜமுக ப்ரணவ மூலா

### அனுபல்லவி.

பாம்பணியுஞ் சிவசங்கர பூரணருளங் கமழுமண
சாம்பவி ஸ்ரீ ஹரிமாயவன்-தங்கை மனோகரி பாலனே ஓம்.

### சரணங்கள்

சருவக்ரு பாகரதற் பரவற்புத சிற்பரனே
சதுர்மறையோ ரரகரவோம் கணபதியென தொழுபவனே
தருவாய்வர மருணேசய் கருணைகர களிறேயிது
தருணந்திரு வுருவேவைங் கரனேபதஞ் சரணே நிதம் ஓம்.

பத்தியுஞ் சித்தியு முத்தியு மருளுங்க ணேச்சுரனே
படிமிசை சிறுவன்பொன்னு சாமிபஜித்திடும் லோலனே
அத்தனே வுத்தம சித்தரும் முத்தரும்பத் தரும்ப ணிந்திடும்
அருளேவரந் தருவாயிது தருணம்பதஞ் சரணே நிதம் ஓம்.

### நாமாவளி.

சுந்தர கணபதி யேசரணம் தொழு
மைந்தனை காப்பா யிது தருணம் சுந்

அந்தரி யுமைமகிழ்ந் திடுஞ் சீலா-சதா
வந்திக்கு மடியவர்க் கனுகூலா சுந்.

வானவர் பணிந்திடு மகத்துவனே-உயர்
ஞானக ருணைம்பர நிரந்தரனே சுந்.

அருமறை முரசறை குருநாதா-பெரு
மிருணிறை துயர்துடைத் தாள்போதா சுந்.

அரவா பரணனி னருமைந்தா-நின்
வரமே புரிந்து சுகந் தந்தாள் சுந்

எண்டிசை புகழ்ந்திடும் பெருந்தனமே-பஜி
தொண்டன் பொன்னுசாமிக் கருள் தினமே. சுந்

இராகம்-கௌளிபந்து. ஆதிதாளம்.

பல்லவி.

மறலியின் பயம் நமக்கேது சுப்ர
மண்யனருளிருக்கும் போது.

அநுபல்லவி.

குறவள்ளி நாயகன் குஞ்சரமுகனிளையன்
சரஹண பவனென்னுஞ் சண்முகனருளிருக்க மற.

சரணங்கள்.

வேங்கை மரமாய் நின்றோன்-வேடர்கடமை வென்றோன்
பாங்காய் பொன் மயிலேறும் பன்னிரு கரனருளிருக்க மற.

ஆன்தனக் கொரு மொழி அன்று பகர்ந்தகுரு
பரகதிர் வடிவேலன் பழனியப்பனருளிருக்க மற.

செஞ்சொல்லால் பொன்னுசாமி செப்புங் கவிக்கருளுங்
கஞ்சனை சிறைவிடுத்த கார்த்திகேயனருளிருக்க மற

நாமாவளி.

சரஹண பவன்பதந் துதித்திடுவோம்
சாரும் வினைகடனை யொழித்திடுவோம் ஓம் சர.

அரனுமை யகமகி ழறுமுகனும்
அயனைசிறைவிடுத்த அநங்குகனும் ஓம் சர.

ஆடு மயின் மீதுவரும் வடிவேலன்
பாடும் பொன்னுசாமிகவிக் கருள் மூலன் ஓம் சர.

---

ஸ்ரீராகம். ஆதி தாளம்.

பல்லவி.

வேலாநின் வரமதைப்புரிய ததிபிது சரணு மக்கே-கதிர்வடி

அநுபல்லவி.

சூலாயுத னருடிரு விழியினிற் றுலங்கிய சரஹணனே-கதிர்வடி

சரணங்கள்.

மங்கைதெய்வ யானைவள்ளிமகிழ் மரகதமயிலேறனே-ஒளி
திங்கட்செஞ் சடைநிலவுகங்கை திருபரன் சிவன் குமரா கதிர்வடி

அருமாமறை தனிற்றிரு நடஞ்செய் யறுமுகனே குகனே-பரனே
குருவாயென திருதயமதிலருள் கோவிந்தனின் மருகா கதிர்வடி

படிமிசை சிறுவன் பொன்னுசாமி பகர்கவிக் கிரங்கிடுவாய்-என்
முடிசாய்த்திரு காமதைக்கூப்பி முருகனே பதம்பணிந்தேன்-கதிர்வடி

நாமாவளி.

வடிவேலன் பதம் பாடி பஜித்திடுவோம்
கொடியவ ருறவதை வெறுத்திடுவோம்.

மரகதமயிலோனை பஜித்திடுவோம்
மறலியை வெருட்டவே நாம் துள்ளுவோம்.

வள்ளி மணாளனை பஜித்திடுவோம்.
கள்ள மனக்குரங்கை யொழித்திடுவோம்.

சண்முகன் பதந்தனை பஜித்திடுவோம்
பொன்னுசாமி கவிபாடி துதித்திடுவோம்.

---

இராகம்-தர்பார். ரூபகதாளம்.

பல்லவி.

சிவப்ரகாசனே ஓம் ஜெயப்ரதாபனே

அனுபல்லவி.

பவப்பிணியை யகற்றுஞ்ஞான பக்தாமிர்தகுண சீலனே சிவ.

சரணங்கள்.

எத்திசையும்பர வித்தொழு மத்தனே
ஏங்கித்தவித்தோர்க் கருள்தருஞ் சித்தனே
முத்தியளித்திடும் வித்தக சித்தனே
முண்டக தாளதை போற்றினேன் கர்த்தனே சிவ.

முப்பசை யெனும யக்கத்தினாலே
மூதோர்கள் மொழிமறந் தேன்கர்வத்தாலே
தப்பிதமியாவும் பொறுப்பது மேலே
தஞ்சமென் றண்டினேன் றளினே சால சிவ

புத்தியில்லாமலே பல்வழி யோடினேன்
புங்கவா கருகி மனமும் வாடினேன்
சித்த மிரங்கபொன் னுசாமி பாடினேன்
சின்மயா னந்தனே நின்னடி நாடினேன் சிவ.

---

இராகம் தேசிகதோடி ரூபகதாளம்.

பல்லவி

வஞ்சமேனையா ஐயா வஞ்சமேனையா

அனுபல்லவி.

தஞ்சமென்று வுந்தன்பதம் கெஞ்சுமிந்த பஞ்சையின்மேல் வஞ்

சரணங்கள்.

கண்ணப்பருக்கன்று காக்ஷி தந்தவா
காலனை வென்றுமார்க் கண்டனை காத்தவா
கண்டந்தனிலரா வந்தனை பூண்டவா
கருணகர பரனேஹர ஹரனேபஞ்சாட் சரனேயின்னும் வஞ்.

சோமனை செஞ்சடை யினிற்றறித்தவா
தொண்டர்தம் துதிக்கிரங்கி மகிழ்பவா
வாமபாகமுமா தேவியற் கீந்தவா
வரனேஹர ஹரனேசிவ பரனேபஞ்சாட் சரனேயின்னும் வஞ்

சுந்தரருக்காக தூதுசென்றவா
தூயசைவமறை துலங்கச்செய்தவா
சந்ததமும் பொன்னுசாமி துதிப்பவா
சரணேஹர ஹரனேசிவ பரனேபஞ்சாட் சரனேயின்னும் வஞ்.

## விருத்தம்.

ஆலம்தை யுண்டுதேவ ரிடுக்கயதைத் தீர்த்தக் கார்த்த வற்புதனே
ஆலவாய் கரும்புமென வலந்துழலுஞ் சிறியனெனக் கருள்சுரந்து
தூலமது மண்ணுகாமுன் மூதோருரை படிநடக்க துணைசெய்குவாய்
தாலம்புகழ் தண்ணமருஞ் சடையானே சிவப்ரகாஸ தயையுள்ளானே.

இன்றுளார் நாளையில ரெனவாசா ஞானம்பேசி யிடுக்கண் செய்யுந்
தன்றியே யீனனெனுந்தன் மதியதைத் திருத்தியாள்வாய் தகைமையோ
மன்றுளா டியதேவே மதியணி சங்கரனே மனமொடுங்கி [னே
நின்றிட வருட்செய்குவாய் நின்மல சிவப்ரகாஸ நீதியோனே.

எவ்வுயிர்க்கு மீசனென வியம்புவது உண்மை யன்றோ யெளியேனென்
அவ்வுயிரி லொருவனுக பாவித்தன தருங்கழலை யருளவேண்டும் [னே
திவ்யக்ரு பாகரனே திரிநேத்ர ஜோதிதனே தீங்க னியே
தெவ்வுமன மில்லாருளந் திகழுமா சிவப்ரகாஸ தெய்வக் குன்றே.

மூத்தோர்மொழி யமுர்தமென கற்றறிந்தும் படிநடக்கா மூடனியானுங்
காத்திரமி கப்படைத்தே யவர்மொழியைப் பழித்துமிக களிப்படைந்தேன்
ஊத்தைஜட மதைநிரப்பி நாய்நரிவி ருந்துகொள்ள வுண்கொழுத்தேன்
சூத்திரத்தை யறிந்தே னல்லேன் திருவருள் சிவப்ரகாஸ சுந்தரனே.

மந்தியெனுங் குரங்கதைப்போல் பற்காட்டி பல்லோர்மெச்சு மதியிலாழ்ந்
சிந்தையொரு வழியடங்கக் கலையுணரா வீண்பித்தேறி சீர்குலைந்து [அ
புந்திநைந் துருகுமென்னை சீர்செய்ய லரிதுனக்கோ புண்ணியனே
கந்தமல ரறுகு கொன்றை தனைதரித்த சிவப்ரகாஸ கருணை யானே.

---

## வாழி விருத்தம்

அருணிறையு மைங்கரனு மானுமை யுறுமுகனு
மருங்கிருய்வ யானை வள்ளி
பெருமைநிறை வெண்ணீறு மக்கமுஞ் சிவசமயம்
பேசரிய குரவ ரடியர்
திருநிறையுந் தேசிகரு மின்னூலை யச்சிட்ட
திகழுமன் பர்க ளும்ஸ்ரீ
உருநிறையே காரந்த சபையும்புல வர்ப்படிப்போர்
உலகின்மிசை வாழ்க மன்னே.

திருச்சிற்றம்பலம்.

## உதகமண்டலம், வண்டிசோலை ஸ்ரீ ஏகாங்கத சமய சங்க பஜனை

தலைவர்—பா. சுந்தரம் பிள்ளை.

காரியத்தலைவர் கிராமம்—மு. அ சாரங்கபாணி பிள்ளை.

உபகாரியத்தலைவர்கள்—R. கோவிந்தசாமி பிள்ளை ச. துருநாஜலம்பிள்ளை

புருஷகாரி—ப. இராமசாமி பிள்ளை

### பஜனை அடியார்கள்.

அ. சா. இராமசந்திரம் பிள்ளை,
ஆ. ஆறுமுகம் ,,
நா. ஐ. பொன்னுசாமி ,,
மு. இரங்கசாமி ,,
ப ஐ. பொன்னுசாமி ,,
அ சா. வேணுகோபால் ,,
ப. இரா, சச்சிதானந்தம் ,,

மு. சின்னசாமி பிள்ளை,
அ. மா குப்புலிங்கம் ,,
ச. பு. சிவலிங்கம் ,,
ரு ரு. இராஜகோபால் ,,
ரு ரு. வடிவேலு ,,
மு. மு. ஆறுமுகம் ,,
மு. முத்து ,,
ஐ. சின்னசாமி ,,

ஹரி ஓம் நன்ரூக குருவாழ்க குருவே துணை

சம்பூரணம்.

Q2:47
N23
17320

☞ இந்நூலானது திருக்காஞ்சல் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மடாலயம், சமாதி திருக்கோயிற்கொண் டெழுந்தருளியிருக்கும் மஹாத்மா ஸ்ரீ சகாப்பா சுவாமிகள், ஸ்ரீமதி இரத்தினம் அம்மணி தேவியார் குருபூஜைக்கு விநியோகமாக 2 அணாவிற்கு விற்கப்படும்.

Printed at St. Antony's Press, Commercial Road, Ootacamund.